RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-38 | 08 பிப்ரவரி | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## திருப்பரங்குன்றத்தில் நீதிமன்ற நிபந்தனையை மீறி பேசியதாக ஹெச்.ராஜா மீது வழக்கு

திருப்பரங்குன்றம், பிப்.8



திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பான ஆர்ப்பாட்டத்தில் நீதிமன்ற நிபந்தனையை மீறிப் பேசியதாக பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

மதுரை திருப்பரங்குன்றம் மலை விவகாரம் தொடர்பாக பிப். 4ம் தேதி இந்து அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்த ஆர்ப்பாட்டத்துக்கு காவல் துறை அனுமதி மறுத்தது. இதற்கு எதிராக இந்து முன்னணி சார்பில், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் அவசர மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், பழங்காநத்தம் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி வழங்கியது. இதில், வெறுப்புணர்வு, கலவரத்தைத் தூண்டும் வகையில் பேசக் கூடாது, முழக்கங்கள் எழுப்பக் கூடாது என்பன உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜா பேசினார். இந்நிலையில், மத மோதலுக்கு தூண்டுதலாக இருந்தது, நீதிமன்ற நிபந்தனைகளை மீறியது உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் ஹெச்.ராஜா மீது மதுரை சுப்பிரமணியபுரம் போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை கோரி நாடாளுமன்ற வளாகத்தில் தமிழக எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்

புதுடெல்லி, பிப்.8



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை மீண்டும் தாயகம் அழைத்து வரக் கோரி தமிழக எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், இலங்கை வசம் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும் தமிழக எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திமுக எம்பி கனிமொழி, "இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்து துன்புறுத்தி வருகின்றனர். தற்போது கிட்டத்தட்ட 97 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முதல்வர் மு.க. ஸ்டாலின் அமைச்சருக்கும் பிரதமருக்கும் கடிதம் எழுதியுள்ளார். அவர் இங்கு வரும் ஒவ்வொரு முறையும், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமரிடம் வலியுறுத்துகிறார்.

இலங்கை கடற்படையினர் நமது மீனவர்களின் கிட்டத்தட்ட 210 படகுகளை எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் தங்கள் படகுகள் இல்லாமல் என்ன செய்ய முடியும்? இது தமிழ்நாட்டில், குறிப்பாக மீனவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சினையாக மாறி வருகிறது. அவர்களின் முழு வாழ்வாதாரம், குடும்பம் மற்றும் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

மீனவர் குழுக்களிடையே பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க குழுக்களை அமைப்பதாக உறுதியளித்த மத்திய அரசு, இதுவரை இது குறித்து எதுவும் செய்யவில்லை. கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. அவர்களை விடுவிக்க அவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

சிறைபிடிக்கப்பட்ட படகுகளை விடுவிக்க வேண்டும். மத்திய அரசு இலங்கை அரசுடன் பேசி இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்." என்று தெரிவித்தார்.


ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடந்த 3ம் தேதி கைது செய்தனர். முன்னதாக, ராமேஸ்வரத்தில் இருந்து கடந்த ஜனவரி 26ம் தேதி மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 34 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது.

கடந்த ஒரு மாத காலத்தில் 5 வெவ்வேறு சம்பவங்களில் தமிழகத்தைச் சேர்ந்த 63 மீனவர்கள் மற்றும் 5 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர். கடந்த 2024ம் ஆண்டில் 36 வெவ்வேறு சம்பவங்களில் 530 மீனவர்கள் மற்றும் 71 மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கை சிறைகளில் 97 மீனவர்கள் உள்ளனர். அதோடு, அவர்களின் 216 மீன்பிடிப் படகுகளும் மீட்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடப்பதால், மீனவர்கள் அச்சத்துடனேயே மீன்பிடிக்கச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, அவர்களின் வலைகளை சேதப்படுத்துவது, அவர்கள் பிடித்த மீன்களை பறிமுதல் செய்வது போன்ற அராஜகங்களை செய்து வந்த இலங்கை கடற்படை, கடந்த மாதம் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தியது.

## ரெப்போ வட்டி விகிதம் 6.25% ஆக குறைப்பு 5 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறை!

மும்பை, பிப்.8



வங்கிகளின் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் 6.25% ஆக குறைக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்குப் பின்னர் ரெப்போ வட்டி விகிதம் குறைந்துள்ளது. இதன்மூலம் வீடு, வாகனக் கடன்களுக்கான வட்டி விகிதமும் குறையக் கூடும்.

ரெப்போ விகிதம் என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதமாகும். இருமாதங்களுக்கு ஒரு முறை ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு கூடி, ரெப்போ விகிதம் தொடர்பாக முடிவுகள் எடுப்பது வழக்கம். இந்நிலையில், ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு ஆலோசனைக் கூட்டம் கடந்த 5 ஆம் தேதி தொடங்கியது. ரிசர்வ் வங்கியின் புதிய ஆளுநரான சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையிலான முதல் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இந்தக் கூட்டத்தின் கடைசி மற்றும் 3ம் நாளான இன்று மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ரெப்போ வட்டி விகிதம் குறைப்பு என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.

5 ஆண்டுகளுக்குப் பின்னர் ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இதுவரையில், 6.5 சதவீதமாக இருந்த ரெப்போ வட்டி தற்போது 0.25 புள்ளிகள் குறைக்கப்பட்டு 6.25 சதவீதமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் வரை 6 முறை ரிசர்வ் வங்கி ரெப்போ விகிதத்தில் மாற்றம் செய்யாமல் அதற்கும் முந்தைய அளவான 6.5 சதவீதத்திலேயே தொடரச் செய்தது. இந்நிலையில் இன்று ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட 2024 25ம் ஆண்டின் பொருளாதார ஆய்வறிக்கையில் 202526ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.3% முதல் 6.8% வரை இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் நாட்டின் பணவீக்கம் கட்டுக்குள் இருப்பதாகவும் கூறப்பட்டது. பணவீக்கம் கட்டுக்குள் இருப்பதால் தொழில் வளர்ச்சியை முடுக்கிவிடும் வகையில் ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடைசியாக கடந்த 2020 மே மாதம் ரெப்போ வட்டி விகிதம் 40 புள்ளிகள் குறைக்கப்பட்டு 4% ஆக இருந்தது என்பது நினைவுகூரத்தக்கது.

## தமிழக கடலோர பகுதிகளில் 1000 கடல் ஆமைகள் உயிரிழப்பு கால்நடை மருத்துவர்களுக்கு பிரேத பரிசோதனை பயிற்சி

சென்னை, பிப்.8



தமிழக கடலோர பகுதிகளில் 1000க்கும் மேற்பட்ட கடல் ஆமைகள் உயிரிழந்த நிலையில், வனத்துறை சார்பில் கால்நடை மருத்துவர்களுக்கு கடல் ஆமைகளை பிரேத பரிசோதனை செய்ய நேற்று முன்தினம் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

கடல் வள பாதுகாப்பு மற்றும் மீன் வளத்தை பெருக்குவதில் கடல் ஆமைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆழ்கடலுக்கு செல்லும் இவை, இனப் பெருக்கம் செய்வதற்காக டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரை தமிழகம் முதல் ஒடிஷா கடலோர பகுதிகளில் நோக்கி வந்து, முட்டையிட்டு வருகின்றன.


இந்நிலையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழக கடலோர பகுதிகளில் மட்டும் 1000க்கும் மேற்பட்ட கடல் ஆமைகளும், ஆந்திர கடலோர பகுதியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆமைகளும் இறந்து அழுகிய நிலையில் கரை ஒதுங்கி வருகின்றன. இது சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வழக்கமாக கால்நடை மருத்துவர்கள் வன உயிரினங்களான புலி, யானை, சிறுத்தை, மான் போன்றவற்றுக்கு பிரேத பரிசோதனை செய்து வருகின்றனர். அதில் நிபுணத்துவமும் பெற்றுள்ளனர். ஆனால் கடல் ஆமை பிரேத பரிசோதனையில் போதிய அனுபவம் இல்லாமல் இருப்பதை கருத்தில் கொண்டு, வனத்துறை சார்பில் வண்டலூரில் உள்ள உயர்நிலை வன உயிரின பாதுகாப்பு நிறுவனத்தில் நேற்று முன்தினம் கடல் ஆமை பிரேத பரிசோதனை பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில் கால்நடை அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர்கள் பங்கேற்று, தமிழக கடலோர பகுதிகளை சேர்ந்த கள கால்நடை மருத்துவர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட 25 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இதில் கடல் ஆமைகளின் உயிரியல், உடலியல் மற்றும் உடற்கூறியல் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. கடல் ஆமையின உடற்கூறாய்வு குறித்தும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

## சட்டவிரோதமாக தனது வீட்டை இடித்ததாக நடிகை கவுதமி மீது வழக்கு தொடர அனுமதி கோரி தயாரிப்பாளர் மனைவி வழக்கு

சென்னை, பிப்.8



சட்டவிரோதமாக தனது வீட்டை இடித்ததாக நடிகை கவுதமிக்கு எதிராக வழக்கு தொடர அனுமதி கோரி திரைப்பட தயாரிப்பாளர் மனைவியான நாச்சாள் என்பவர் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவுக்கு பதிலளிக்க கவுதமிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திரைப்பட நடிகையும், அதிமுக பிரமுகருமான கவுதமியின் சொத்துகளை விற்று தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்டதாக திரைப்படத் தயாரிப்பாளரும், விநியோகஸ்தருமான சி.அழகப்பன், அவரது மனைவி நாச்சாள், மகன், மருமகள், சகோதரர் உள்ளிட்ட பலர் மீது வழக்கு பதிவு செய்த போலீஸார் அவர்களை கடந்த 2023ம் ஆண்டு கைது செய்தனர்.

இந்நிலையில், அழகப்பனின் மனைவி நாச்சாள், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

முறையாக அனுமதி: நீலாங்கரையில் நடிகை கவுதமியுடன் இணைந்து நிலம் வாங்கி, இருவரும் அதை பிரித்துக் கொண்டோம். எனக்குரிய இடத்தில் வீடு கட்டி, 90 சதவீத கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் எங்களுக்கு எதிராக கவுதமி அளித்த புகாரில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டோம்.

மாநகராட்சியில் முறையாக அனுமதி பெற்று கட்டுமானப் பணிகளை மேற்கொண்ட நிலையில், அனுமதியின்றி கட்டுமானங்களை மேற்கொள்வதாக கவுதமி அளித்த புகாரில் மாநகராட்சி அதிகாரிகள் எங்களுக்கு நோட்டீஸ் அனுப்பினர். சிறையில் இருந்து வெளியே வருவதற்குள் எங்களது வீடு சட்டவிரோதமாக இடிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி அதிகாரிகள் எங்களது வீட்டை இடித்ததாக நினைத்து அவர்களிடம் விளக்கம் கோரியபோது தாங்கள் இடிக்கவில்லை என தகவல் அறியும் உரிமை சட்டத்தின் வாயிலாக விளக்கம் அளித்துள்ளனர். அருகில் இருப்பவர்களிடம் விசாரித்தபோது நடிகை கவுதமிதான் ஆட்களுடன் வந்து எங்களது வீட்டை இடித்ததாக தெரிவித்தனர்.

எனவே, எங்களது வீட்டை இடித்ததால் ஏற்பட்ட இழப்பு மற்றும் மனஉளைச்சலுக்கு இழப்பீடாக ரூ.2 கோடியை வழங்க வேண்டும் என கவுதமிக்கு உத்தரவிட வேண்டும். இது தொடர்பாக வழக்கு தொடர அனுமதி அளிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கோரியிருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி கே.குமரேஷ்பாபு, வழக்கு தொடர அனுமதி கோருவது தொடர்பாக கவுதமி தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை இரு வாரங்களுக்கு தள்ளி வைத்துள்ளார்.

## தேசம் விடுதலை பெற்றதை வானொலியில் அறிவித்த தமிழ் செய்தி வாசிப்பாளர் காலமானார்!

சென்னை, பிப்.8



கடந்த 1947, ஆகஸ்ட் 16ம் தேதி அன்று காலை 5.45 மணி அளவில் 'ஆல் இந்தியா ரேடியோ'வில் இந்திய தேசம் விடுதலை பெற்றதை தமிழ் மக்களுக்கு அறிவித்த செய்தி வாசிப்பாளரான ஆர்.எஸ்.வெங்கட்ராமன் காலமானார். அவருக்கு வயது 102.

சுமார் 70, 80 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தில் வானொலி மற்றும் செய்தித்தாள்கள் தான் இந்திய மக்களுக்கு பல்வேறு செய்திகளை வெளியிட்டு வந்தது. அது வானொலியின் பொற்காலம் என்றும் சொல்லலாம். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் இருந்து தேசம் சுதந்திரம் காண வேண்டுமென விடுதலை போராட்டங்கள் நடைபெற்ற சூழலில் இந்தியாவுக்கு ஆங்கிலேயர்கள் விடுதலை கொடுத்தனர். அந்த பொன்னான செய்தியை லட்சோப லட்ச தமிழர்களுக்கு தனது குரல் மூலம் அறிவித்தவர் ஆர்.எஸ். வெங்கட்ராமன்.

அவரது மகள் மனோரமா கணேஷ்குமார், தன் அப்பாவின் மறைவு செய்தியை உறுதி செய்துள்ளார். சென்னை மந்தைவெளியில் உள்ள இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அவரது உயிர் பிரிந்தது.

மன்னார்குடிக்கு அருகிலுள்ள ராதா நரசிம்மபுரத்தில் கடந்த 1923, ஏப்ரல் 14ம் தேதி ஆர்.எஸ்.வெங்கட்ராமன் பிறந்தார். அவரது அப்பா ஆசிரியராக பணியாற்றியவர். பள்ளிப் படிப்பை முடித்ததும் டெல்லிக்கு அவர் சென்றுள்ளார். அங்கு ஆல் இந்தியா ரேடியோவில் மொழிபெயர்ப்பாளர் மற்றும் செய்தி வாசிப்பாளராக 1945ல் பணியை தொடங்கி உள்ளார். ஆல் இந்தியா ரேடியோவின் தென்கிழக்கு ஆசிய சேனலில் தேசம் விடுதலை பெற்ற தெரிவித்துள்ளார்.

ஓய்வுக்கு பிறகும் தனது 86வது வயது வரையில் செய்தி பிரிவில் அவர் பணியாற்றி உள்ளார். 'அருமையான மனிதர் மற்றும் சிறந்த குரல் வளம் கொண்டவர்' என அவரை போற்றுகிறார் அவருடன் பணியாற்றிய ஒருவர். அவர் கஜமுகன் என்ற பெயரில் தமிழ் சிறுகதைகளையும் எழுதி உள்ளார் என்கிறார் அவரது மருமகள் ஸ்ரீமதி ரவிச்சந்திரன்.

## ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு வழக்கறிஞர் ஜாமீன் மனு தள்ளுபடி




சென்னை, பிப்.8

ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு பயன்படுத்த வைத்திருந்த வெடிகுண்டுகளை நீதிமன்றத்தில் வைத்து மாற்றிய வழக்கில் கைது செய்யப்பட்ட வழக்கறிஞர் ஹரிஹரனின் ஜாமீன் மனுவை திரும்ப பெற அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பழைய வண்ணாரப்பேட்டையை சேர்ந்தவர் வழக்கறிஞர் ஹரிஹரன். ஆம்ஸ்ட்ராங் படுகொலைக்கு பயன்படுத்த இருந்த வெடிகுண்டுகளை உயர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து மற்ற குற்றவாளிகளுக்கு மாற்றி கொடுத்ததாக, இந்த வழக்கின், 17வது குற்றவாளியாக போலீஸார் இவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஹரிஹரன் 112 நாட்களுக்கு மேல் சிறையில் இருப்பதால் ஜாமீன் வழங்கக்கோரி எழும்பூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த எழும்பூர் நீதிமன்றம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதாக கூறி ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்தது. ஜாமீன் தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு வழக்கில் கூடுதல் குற்றப்பத்திரிக்கை காவல்துறை தாக்கல் செய்தது.

விசாரணை நிலுவையில் இருந்த போது ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், எழும்பூர் நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து தனக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என வழக்கறிஞர் ஹரிஹரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நீதிபதி பி.வேல்முருகன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால் ஜாமீன் மனுவை திரும்ப பெற அனுமதிக்க வேண்டும் என ஹரிஹரன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி, மனுவை திரும்பப் பெற அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



பழனி பிப்08

திண்டுக்கல் மாவட்டம் பழனியில்தைப்பூசதிருவிழாவை முன்னிட்டு தமிழகம் மட்டுமின்றி கேரளா,கர்நாடகா மாநிலங்களில் இருந்து பக்தர்கள் பாதயாத்திரையாக வந்த வண்ணம் உள்ளனர். மாவட்ட காவல் துறை சார்பில் பாதுகாப்பு பணி அதிகரிக்கப்பட்டு உள்ளது

தைப்பூச பக்தர்களின் நலன் மற்றும் உதவிக்காக பழனியில் 25 காவல் உதவி மையங்கள் அமைக்கும் பணி நடக்கிறது. இதில் கூட்ட நெரிசல் ஏற்படும் இடங்கள் கண்டறியப்பட்டு அங்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட உள்ளது.

குற்ற சம்பவங்கள் ஏற்படுவதை தடுக்கவும், பக்தர்களுக்கு உதவிடவும் ‘மே ஐஹெல்ப்’ என்றபெயரில்உதவி மையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. அடிவாரம், பஸ் நிலையம், கிரிவீதிகளில் 37 கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 5 பேர் கொண்ட 28 குற்ற தடுப்பு போலீஸ் குழு கண்காணிப்பில் ஈடுபட உள்ளனர். திருக்கல்யாணம், தேரோட்டம் ஆகிய நாட்களில் லட்சக்கணக்கில் பக்தர்கள் வருகை இருக்கும். எனவே 4 நாட்களில் 3500க்கும் மேற்பட்ட காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர் என பழனி காவல் துணை கண்காணிப்பாளர்.தனஞ்செயன் தெரிவித்துள்ளார்.

கொடியேற்றத்தை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள முருக பக்தர்கள் பால்குடம் எடுத்தும், அலகு குத்தியும் பாதயாத்திரையாக பழனிக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

# பன்னிரண்டாம் வகுப்பு துணைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கல்லூரியில் சேர திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அழைப்பு



திருப்பூர் பிப்.8

திண்டுக்கல் மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு துணைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்த தனியார் கல்லூரியில் சேர விண்ணப்பிக்காத தனியார் கல்லூரிக்கு விண்ணப்பித்து சேர்க்கை கிடைக்காத மாணவர்கள் வரும் (12.08.2024 மற்றும் 13.08.2024) ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அறை எண்.705; செயல்படவுள்ள உயர் கல்வி வழிகாட்டுதல் உதவி மையத்தினை அணுகவும் கல்லூரியில் பயில விரும்பும் மாணவர்கள ; தாங்கள் விரும்பும் தனியார் கல்லூரி மற்றும் பாடப்பிரிவுகளை தேர்வு செய்து உடனடியாக கல்லூரியில் சேர்ந்து பயன் பெறலாம். மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் கல்லூரியில் சேர மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் 12 ஆம் வகுப்பு துணைத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும ; 12ஆம் வகுப்பு முடித்த தனியார் கல்லூரியில் சேர விண்ணப்பிக்காத தனியார் கல்லூரிக்கு விண்ணப்பித்து சேர்க்கை கிடைக்காத மாணவர்கள் வரும் (12.08.2024 மற்றும் 13.08.2024) ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அறை எண்.705 செயல்படவுள்ள உயர்கல்வி வழிகாட்டுதல் உதவி மையத்தினை அணுகவும்.இதுகுறித்துமாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்ததாவது, திருப்பூர் மாவட்டத்தில் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி அடைந்த 23,500 மாணவர்கள் அனைவரும் 100 சதவீதம் உயர்கல்விக்கு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் அரசின் சார்பில ; தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அதன் ஒருபகுதியாக கடந்த (29.06.2024) அன்று மாவட ;ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற உயர்கல்வி உதவி மற்றும் ஆலோசனை முகாமில் கல்லூரிக்கு விண்ணப்பிக்காத, தாய் தந்தையர் இல்லாதமாணவர்கள், கல ;லூரிக் கட்டணம் செலுத்த முடியாத நிலையில் உள்ள மாணவர்கள் என 200 மாணவர்கள் நேரடி சேர்க்கை நடைபெற்று பயனடைந்துள்ளனர். இதில் 115 மாணவர்கள் மாவட்ட நிர்வாகத்தின் முன்னெடுப்பின் மூலம் நிதியுதவி பெற்று பயனடைந்துள்ளனர்.மேலும், முதற்கட்டமாக தனியார் கலை, அறிவியல், கல்லூரிகள், பாலிடெக்னிக், ஐ.டி.ஐ, நர்சிங் கல்லூரிகள் ஆகிய கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்வதற்கு (13.07.2024 முதல் 16.07.2024 வரை) நான்கு நாட்களும், இரண்டாம் கட்டமாக (24.07.2024 முதல் 28.07.2024 வரை) ஐந்து நாள்களும், முன்றாம் கட்டமாக (01.08.2024 மற்றும் 02.08.2024) ஆகிய இரண்டு நாட்களும் ஆலோசனை முகாம்கள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, 12.08.2024 மற்றும் 13.08.2024 ஆகிய இரண்டு நாட்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அறை எண்.705 ஸ்ரீ ல் செயல்படவுள்ள உயர்கல்வி வழிகாட்டுதல் மையத்தினை அணுகி தாங்கள் விரும்பும் தனியார் கல்லூரி மற்றும் பாடப்பிரிவுகளை தேர்வுசெய்து உடனடியாக உயர்கல்வியில் சேர்ந்து பயன்பெறலாம். 12 ஆம் வகுப்பு துணை தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும் 12ஆம் வகுப்பு முடித்து இதுவரை தனியார் கல்லூரியில் சேர விண்ணப்பிக்காத,தனியார் கல்லூரிக்கு விண்ணப்பித்து சேர்க்கையடையாத மாணவ, மாணவியர்களுக்கு தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலிடெக்னிக், ஐடிஐ மற்றும் நர்சிங் கல ;லூரிகள் ஆகிய கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற உயர்கல ;வி வழிகாட ;டுதல் உதவி மையத்தினை உடனடியாக அணுகிபயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ் தெரி வித்துள்ளார்

# பழனி தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு கோவை ஜே.சி.டி கல்வி நிறுவனங்களின் சார்பில் நீர்மோர் பந்தல்



பழனி பிப்.8

பழனிதைப்பூசத்திருவிழாவை முன்னிட்டு கோவை ஜே.சி.டி கல்வி நிறுவனங்களின் சார்பில் நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டது. நீர்மோர் பந்தலை பழனி நகர காவல் ஆய்வாளர் மணிமாறன் திறந்துவைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் கடந்த 5ம் தேதி தைப்பூசத் திருவிழா கொடி ஏற்றத்துடன் துவங்கியது. முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாதியாத்திரையாக வந்த வண்ணம் உள்ளனர். பக்தர்களின் வருகையை ஒட்டி ஏராளமான தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆங்காங்கே அன்னதானம் வழங்குவது வழக்கம்.

இந்நிலையில் கோவை ஜே.சி.டி கல்வி நிறுவனங்கள் சார்பில் பழனி தபால் நிலையம் முன்பு நேற்று நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டது. இன்று முதல் 10நாட்களுக்கு பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு இலவசமாக நீர் மோர், பானகம், இளநீர், பனங்கற்கண்டு நீர் உள் ளிட்டவை இலவசமாக வழங்கப் படும் என தெரிவித்துள்ளனர். ஜே சி டி கல்வி நிறுவனங்களின் செயலர் துர்கா சங்கர் தலைமையில் நடைபெற்ற நீர் மோர் பந்தல் திறப்பு விழாவில் பழனி நகர காவல் ஆய்வாளர் மணிமாறன் கலந்து கொண்டு திறந்து வைத்தார் ..

# தஞ்சாவூர்மீனாட்சி மருத்துவமனை நான்கு ஆண்டுகளாக படுத்த படுக்கையிலிருந்த சமையல் கலைஞருக்கு நடமாட்ட திறனை மீண்டும் வழங்கிய மறுஅறுவைசிகிச்சை



தஞ்சாவூர், பிப்.8

இடது தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டதற்கு பிறகு பிற மருத்துவமனைகளில் இருமுறை உட்பதிய அறுவைசிகிச்சைகள் செய்த போதிலும் எலும்பு முறிவு சரியாகாததால் நடமாட்டமின்றி படுத்த படுக்கையாக நான்கு ஆண்டுகள் பட்ட அவதியை தஞ்சாவூர்மீனாட்சி மருத்துவமனையின் எலும்பியல் அறுவைசிகிச்சை நிபுணர்கள் முடிவுக்கு கொண்டு வந்து அவரை மீண்டும் நடமாடச் செய்திருக்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த சமையற்கலைஞரான திரு. குமார்க்கு 2018ம் ஆண்டில் பணிபுரியும் இடத்தில் உயரத் திலிருந்து கீழே விருந்ததற்கு பிறகு அவரது இடது தொடை எலும்பில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மனித உடலில் மிக நீளமான மற்றும் வலுவான எலும்பு இதுவே. எலும்பு முறிவை சரிசெய்ய அந்த ஆண்டே அறுவைசிகிச்சையை அவர் செய்து கொண்ட போதிலும் அவரது நிலைமையில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. ஒரு ஆண்டு நடமாட்டமின்றி கடுமையான வலியுடன் அவதிப்பட்ட அவர் வேறொரு மருத்துவமனையில் இரண்டாவது முறையாக தொடை எலும்பு முறிவை சரிசெய்ய உட்பதிய அறுவை சிகிச்சையை செய்து கொண்டிருக்கிறார். அறுவை சிகிச்சையிலும் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காமல் அவரது வலியும், துயரமும் தொடர்ந்தன.

எனினும், எப்படியாவது குணமடைய வேண்டுமென்ற மனஉறுதியுடன் குமார் தஞ் சாவூர் மீனாட்சி மருத்துவ மனையில் சிகிச்சைக்காக வந்தார். பரிசோதனைகளுக்கு பிறகு இவருக்கு ஐந்து மணி நேரம் நீடித்த அறுவை சிகிச்சையை எலும்பியல் அறுவைசிகிச்சை நிபுணர்கள் மேற்கொண்டனர். இதில், எலும்பு ஒட்டுமுறை, முன்பு பொருத்தப்பட்ட திருகாணியை அகற்றுதல், மற்றும் பாதிக்கப் பட்ட பகுதியை வலுப்படுத்த பிளேட் பொருத்துதல் ஆகிய செயல்பாடுகள் இடம் பெற்றன. நடமாட்டமின்றி படுக்கை யிலேயே நான்கு ஆண்டுகளை கழித்ததால் நோயாளியின் அதிகரித்த உடல் எடையும் சிக்கலை கடுமையாக்கி யிருந்தது. இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போது நோயாளியின் உடல் எடை 100 கிலோவிற்கும் அதிகமாகியிருந்தது.

மருத்துவமனையின் எலும்பி யல் துறையின் தலைவரும், முதுநிலை நிபுணருமான டாக்டர். ரி. பார்த்திபன் தலைமையில் இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவைசிகிச்சைக்கு பிறகு சிறப்பாக கட்டமைக்கப்பட்ட இயன்முறைசிகிச்சை அவருக்கு வழங்கப்பட்டது. ஆறு மாதங் களுக்குள் அவரது தொடை எலும்பு முழுமையாக பொருந்தி இணைந்திருக்கிறது. இப்போது முற்றிலும் பாதிப்பிலிருந்து மீண்டு குணமடைந்திருக்கிற குமார் தனது பணிக்கு திரும்பி வழக்கமான வாழ்க்கையை மீண்டும் வாழத் தொடங்கி யிருக்கிறார்.

மீனாட்சி மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். ரவிச்சந்திரன் இந்த வெற்றிகர அறுவைசிகிச்சை குறித்து கூறியதாவது: “திரும்பச் செய்யும் (ரீடு) தொடை எலும்பு அறுவைசிகிச்சை என்பது உண்மையிலேயே அதிக சிக்கலான எலும்பு முறிவு நீக்கல் செயல்முறையாகும். எலும்பு இணையாமை (எலும்பு குணமடைய தவறுவது), இணைப்பொருமைப்பிறழ்வு அல்லது உட்பதியம் செயல்படத் தவறுவது போன்ற சிக்கல்களின் காரணமாக தொடக்க அறுவை சிகிச்சைகள் தோல்வியுறும் போது தனிச்சிறப்பான அறுவை சிகிச்சைக்கு பிறகு துல்லியமான பராமரிப்பு மற்றும் இயன்முறை மருத்துவம் (பிசியோதெரபி) ஆகியவை கண்டிப்பாக தேவைப்படும். எலும்பியல், இதயவியல், மயக்க மருந்தியல், இயன்முறை சிகிச்சை உட்பட துறைகளை சேர்ந்த சிறப்பு நிபுணர்களின் ஒத்துழைப்பின் வழியாகவே. இதய சிக்கல்கள் வரும் இடர்வாய்ப்பும் மற்றும் நோயாளியின் அளவுக்கதிகமான எடையும் சவால்களாக நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எமது மருத்துவமனையின் நவீன கட்டமைப்பு வசதிகளும் மற்றும் எமது மருத்துவர்கள் குழுவின் நிகரற்ற நிபுணத்துவமும், இந்த சவால்களை சமாளித்து வெற்றிகாண மிக முக்கியமான அம்சங்களாக இருந்தன. இந்த வெற்றிகர நிகழ்வு நேர்த்தியாக முன்னிலைப்படுத்துகிறது”.

எலும்பியல் துறையின் தலைவரும், முதுநிலை அறுவைசிகிச்சை நிபுணருமான டாக்டர். ரி. பார்த்திபன் பேசுகையில், “சேதமடைந்த எலும்பை சரிசெய்ய அல்லது அகற்றுவதற்கு எலும்புத்திசு மறுபதியம் செய்யப்படுகிற ஒரு அறுவைசிகிச்சை நோயாளியின் உடலில் இருந்தே இந்த ஒட்டு எடுக்கப்பட்டது. மூன்றாவது முறையாக அதே தொடை எலும்பில் அறுவைசிகிச்சை செய்வது என்பது கணிச மான சவால்கள் நிறைந்த தாக இருந்தது. இதய பிரச்சனை களுக்கான சாத்தியமும், கூடுதல் கவலையளிக்கும் அம்சமாக இருந்தது. மேலும் அறுவை சிகிச்சையின் போது பல்வேறு துறைகளின் நிபுணர்களது ஒத்துழைப்பு செயல்பாட்டின் வழியாக இந்நோயாளிக்கான சிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்து மீண்டும் பணிக்கு திரும்பி இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கு வழிவகுத்திருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கிறோம்” என்று குறிப்பிட்டார்.

# ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிகுலேஷன் மேன்நிலை பள்ளி ஆண்டு விழா




தாம்பரம் பிப்.8

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் பழைய தாம்பரம் தெற்கு தெருவில் அமைந்துள்ள ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிகுலேஷன் மேன்நிலை பள்ளி 47வது ஆண்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தலைவர் ஸ்ரீராமகிருஷ்ணா கல்வி அறக்கட்டளை எஸ்.ஆர். ராஜா எம் எல் ஏ தலைமையில் தமிழ்நாடு பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி, சிறப்புரையாற்றினார்

உடன் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ், 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, பள்ளி செயலர் டி.எஸ்.ராமச்சந்திரன் மற்றும் நிர்வாகத்தினர், முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

# தமிழகத்தில் சமூக ஆர்வலர்களின் படுகொலைகளை கண்டித்து குரோம்பேட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம்




குரோம்பேட்டை பிப்.8

தமிழகத்தில் நடைபெற்ற சமூக ஆர்வலர்களின் படுகொலைகளை கண்டித்து குரோம்பேட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை அடுத்து குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் பத்து ரூபாய் இயக்கம் மக்களுக்கான மக்கள் இயக்கம் சமூக ஆர்வலர் அமைப்புகளின் கூட்டமைப்பு இணைந்து தமிழகத்தில் நடைபெற்ற சமூக ஆர்வலர்களின் படுகொலைகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மக்களுக்கான மக்கள் இயக்கம் பொதுச் செயலாளர் கார்த்திக் அண்ணன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பத்து ரூபாய் இயக்க மாநில செயலாளர் வழக்கறிஞர் பாஸ்கர் முன்னிலை வகித்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக தேசிய மக்கள் கட்சி தலைவர் வழக்கறிஞர் எம்எல் ரவி சுய வருங்காடி மற்றும் பத்திரிகை ஆசிரியர் எஸ் எம் கோவிந்தராஜ் மூத்த குடி மக்கள் நல சங்க தலைவர் மீனாட்சி சுந்தரம் ஆக்கிரமிப்பு போராளி பட்ட வஞ்சளம் சமூக ஆர்வலர் பல்லாவரம் ஜினிகர் ஆகியோர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பி கண்டன உரை நிகழ்த்தினர் இதில் மூத்த குடிமகன் கிருஷ்ணன் ஆர்.கே.துளசி, ரதன், எம்.வரதன், பி.சரவணன், சந்தோஷ் குமார், வெங்கடேஷ், ரியாஸ் அஹமத், ஹரி கிருஷ்ணன், இளைய போராளி கிரியா நத்தம், மற்றும் சமூக ஆர்வலர் அமைப்புகளின் கூட்டமைப்பு முத்தக்குடி மக்கள் நல சங்கம் மக்கள் விழிப்புணர்வு மையம் தாம்பரம் மாநகர வாழ் மக்கள் நல சங்கங்களில் கூட்ட மைப்பு சார்பில் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்..

# மானாமதுரை வட்டம், சின்னகண்ணனூர் கிராமத்தில், பிப்.12 அன்று மக்கள் தொடர்பு முகாம்



சிவகங்கை பிப்.8

சிவகங்கை மாவட்டம், மானா மதுரை வட்டம், மானாமதுரை உள்வட்டம், சின்னகண்ணனூர் குரூப், சின்னகண்ணனூர் கிராமத்தில், வருகின்ற 12.02.2025 அன்று காலை 10.00 மணியளவில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது.

மக்கள் தொடர்பு முகாமில், அரசுத்துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து அரசின் திட்டங்களை துறை சார்ந்த முதன்மை அலுவலர்களைக் கொண்டு, பொதுமக்களுக்கு திட்டங்கள் குறித்து எடுத் துரைத்து, தகுதிவாய்ந்த பயனாளிகளை பயன்பெறச் செய்வதே இம்மக்கள் தொடர்பு முகாமின் நோக்கமாகும்.

எனவே, மேற்கண்ட கிரா மத்தை சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் நடைபெறவுள்ள மக்கள் தொடர்பு முகாமில் கலந்து கொண்டு, அரசின் திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகளை அறிந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# நாகர்கோவில் மாநகராட்சிக் குட்பட்ட வலம்புரிவிளை குப்பை கிடங்கில் திடீர் தீ விபத்து! மேயர் தலைமையில் அதிகாரிகள் நேரில் ஆய்வு




நாகர்கோவில், பிப்.8

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக் குட்பட்ட வலம்புரிவிளை குப்பை கிடங்கில் தீ விபத்துஇதனால் சுற்றுவட்டார பகுதியில் புகைமூட்டத்தால் வாகன ஓட்டிகள் மற்றும் அப்பகுதியில் உள்ள குடியிருப்பு வாசிகள் அவதிதீயணைக்க3 தீயணைப்பு வானங்கள் தண்ணீரை பீச்சி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்,அங்கு இதுபோன்ற தீ விபத்துக்கள் தொடர்ந்து அரங்கேறி வருவதால் குப்பை கிடங்கை அங்கிருந்து மாற்ற வேண்டும் என அப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர், ஆனால் குப்பை கிடங்கை அங்கிருந்து மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனையடுத்து நாகர்கோவில் மாநகராட்சியின் வலம்புரி உரக்கிடங்கில் ஏற்பட்ட திடீர் தீயினை அணைக்கும் பணிகளை மேயர் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் ரெ.மகேஷ் நேரில் பார்வையிட்டு மேலும் தீ மேலும் பரவாமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாவட்ட தீயணைப்பு அலுவலருடன் ஆலோசனை நடத்தினார்.மேலும் குப்பை கிடங்கில் தீ பிடிக்காமலிருக்க தேவையான உபகரணங்கள் வாங்குவதற்காக மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். உடன் மண்டலத்தலைவர் அகஸ்டினா கோகிலவாணி, மாமன்ற உறுப்பினர்கள் அனிலா, நவீன்குமார் கழக செயற்குழு சதா சிவம் ஆகியோர் உடனிருந்தனர்.

# தென்காசியில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு வாகன பிரச்சாரத்துடன் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை ஒட்டிய ஆட்சியர்




தென்காசி, பிப்.8

தென்காசிமாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தொழிலாளர் துறை சார்பில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதி மொழியினை அனைத்து துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

தென்காசிமாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் தலைமையில் தொழிலாளர் துறை சார்பில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதி மொழியினை அனைத்து துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரி வித்ததாவது,

தொழிலாளர் துறை அலுவலர்களால் தென்காசி நகரின் முக்கிய பகுதிகளில் பொதுமக்கள் கூடும் இடங்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு வாகன பிரச்சாரத்துடன் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கி கொத்தடிமை தொழிலாளர் முறைக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், ஏற்கனவே 03.02.2025 மற்றும் 04.02.2025 ஆகிய தேதிகளில் தென்காசி வருவாய் கோட்டாட்சியர் தலைமையில், ஆலங்குளம் பகுதிகளில் உள்ள அரிசி ஆலைகளிலும், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில், சிவகிரி பகுதிகளில் உள்ள செங்கல்சூளைகளிலும் மாவட்ட கண்காணிப்பு குழு உறுப்பினர்களுடன் கொத்தடிமை தொழிலாளர் தொடர்பாக கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. தென்காசி மாவட்டத்தில், தொழிலாளர்களை கொத்தடிமைகளாக பணிக்கு அமர்த்தினாலோ அல்லது அதற்கு உடந்தையாக இருந்தாலோ அவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரி வித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வு வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கொத்தடிமைத் தொழிலாளர் முறைக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தினை துவக்கிவைத்தும், விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டியும், விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் துறை உதவி ஆய்வர்கள் (தென்காசி) செல்வி.மு.மெஹ்தா ஃபாஸ்லின், சு.கிருஷ்ண ஜீவா, தொழிலாளர் உதவி ஆய்வாளர் செல்வி.வசந்தா, முத்திரை ஆய்வாளர் பா.சவரீசன் (தென்காசி), தொழிலாளர் உதவி ஆய்வர் செல்வி.மு.மீனாட்சி, (சங்கரன்கோவில்) கண்காணிப் பாளர் லெ.முத்துஜெகன் மாதா, தொழிலாளர் உதவி ஆணையர்(சபாதி) அலுவலகம், உதவியாளர்கள், கோ.இசக்கி, உ.முகம்மது நிஃமத்துல்லாஹ் மற்றும் அனைத்து துறை உயர் அலுவலர்கள். அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணியை, ஒட்டன்சத்திரம் வட்டம், கள்ளிமந்தையத்தில் அவரது இல்லத்தில், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றுள்ள செ.சரவணன் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார்.

# பழனியில் உலக நலன் வேண்டி நடத்த சித்தர் வழிபாடு ஜப்பானிலிருந்து வந்தவர்கள் பாரம்பரிய உடையுடன் பங்கேற்பு




பழனி பிப்.8

திண்டுக்கல் பழனி மலை அடிவாரத்தில் சித்தர் புலிப்பாணி ஜீவசமாதியில் உலக நலன் வேண்டி சிறப்பு வழிபாடு நடைபெற்றது. சித்தர் அகத்தியர், போகர் , புலிப்பாணி உள்ளிட்ட 18 சித்தர்கள் பூஜை நடைபெற்றது. சித்தர் போகர் மற்றும் புலிப்பாணி எழுதிய ஓலைச்சுவடிகள் வைக்கப்பட்டு சிறப்பு பூஜை செய்யப்பட்டன. தொடர்ந்து வேத மந்திரங்கள் முழங்க நூற்றுக்கும் மேற்பட்ட மூலிகைகள் பயன்படுத்தி வேத மந்திரம் முழங்க யாகம் நடைபெற்றது. பழனி ஆதீனம் சிவானந்த புலிப்பாணி சுவாமிகள், ஜப்பானிய தொழிலதிபர் கோபால் பிள்ளை சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற யாகத்தில் ஜப்பான் நாட்டில் இருந்து வந்திருந்த வெளிநாட்டினவர் தமிழர் பாரம்பரிய உடையான வேஷ்டி சேலை அணிந்து கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்டம் பனையூர் கிராமத்தில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் அமைத்துத்தர வேண்டி கிராம பொதுமக்கள் கோரிக்கை





சிவகங்கை பிப்.8

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பனையூர் கிராமம். இந்த கிராமத்தின் ஜீவாதாரமே விவசாயப்பணிகள் மட்டுமே. மேலும் இந்த வருடத்தில் பெய்த மழையின் காரணமாக கண்மாய் மற்றும் கிணறுகளில் தேவையான நீர் இருப்பு இருப்பதன் காரணமாக கோடை நெல் பயிருட்டுள்ளனர்... எனவே சாகுடி செய்யும் நெல் மூட்டைகளை தனியாரிடம் விற்பனை செய்வதனால் ஏற்படும் நடைமுறைச்சிக்கல்களை தவிர்க்கும் பொருட்டு அரசின் நேரடி நெல்கொள்முதல் நிலையம் வேண்டி பனையூர் உடையநாதபுரம், பில்லூர், பொன்னாகுளம் அழுபிள்ளைதாங்கி கிராம விவசாயிகள் ஒன்றுகூடி பனையூர் விவசாயிகளான கோபு மற்றும் அரசு அம்பலம் ஆகியோர் தலலமையில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், மற்றும் சிவகங்கை நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் ஆகியோரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

இதுகுறித்து பேசிய விவசாயிகள் பனையூர் கிராமத்தில் அரசின் நேரடி நெல்கொள்முதல் நிலையம் அரசு அமைத்துக் கொடுத்தால் அது எங்களது கிராமத்தைத் தாண்டியும் இருபதிற்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் பயனடைவர் என விவசாயிகள் தெரிவித்தனர்...

இதனிடையே இதுபற்றி தெரிவித்த நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் கூறும்போது பனையூரில் அரசின் நேரடி நெல்கொள்முதல் நிலையம் நிரந்தரமாகவே அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் மாவட்ட ஆட்சியரிடம் இதுபற்றி எடுத்துக்கூறி நிரந்தரமாகவே நிலையம் அமைக்க ஏற்பாடுகள் செய்வதாகவும் உறுதியளித்துள்ளார்...

இந்த நிகழ்ச்சியில் பனையூர், பில்லூர், உடையநாதபுரம், அழுபிள்ளைதாங்கி, பொன்னாகுளம் உள்ளிட்ட பல கிராமங்களின் விவசாயிகள் பங்கேற்றனர்...

# நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் பெண்கள் மேம்பாட்டிற்கான சட்ட விழிப்புணர்வு முகாம்



நாமக்கல் பிப்.8

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் எக்ஸல் வணிகவியல் மற்றும் அறிவியல் கல்லூரி பெண்கள் மேம்பாட்டு குழுமம், குமாரபாளையம் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை இணைந்து பவானி தாலுகா ஊராட்சி கோட்டை, தொட்டிபாளையம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட கிராம பகுதிகளில் பெண்களின் மேம்பாட்டிற்கான சட்ட விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமில் இளம் வயது திருமணங்கள் தடுக்கப்படுவதின் அவசியத்தையும், அவற்றினால் ஏற்படும் விளைவுகளையும் வழக்கறிஞர் திலோத்தமா விரிவாக எடுத்துரைத்தார். மேலும் அவர் பேசும் போது பெண் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் அதன் மூலம் அந்த குடும்பத்தில் ஏற்படும் முன்னேற்றத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

விழாவில் முன்னிலை வகித்து பேசிய தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் தலைவர் சீனிவாசன் பேசும் பொழுது, பெண்கள் தற்போது அனைத்து துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக சாதித்து வருகிறார்கள் என்றும் அதை பெண்கள் அனைவரும் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என கூறினார்.

இந்த முகாமில் 50க்கும் மேற்பட்ட கிராமப்புற பெண்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்த நிகழ்வில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை பேராசிரியைகள் இ.திபேஸ்வரி, சகுந்தலா, அம்பிகா, நந்தினி, தாமரைசெல்வி, பவித்ரா, ஆகியோர் செய்து இருந்தனர். விழாவின் முடிவில் செயலர் முனைவர் ப.இந்திராணி அனைவருக்கும் நன்றி தெரி வித்தார்.

# உதகையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் முன்பாக பேரிடர் மீட்பு குழுவினரின் ஒத்திகை நிகழ்ச்சி



நீலகிரி பிப்.8

நீலகிரி மாவட்டம் மழை பாங்கான மாவட்டம் மட்டுமில்லாத ஆண்டுதோறும் பருவமழையால் பல பெரிய பேரிடர்கள் ஏற்படக்கூடிய மாவட்டமாக உள்ளது. மாவட்டத்தில் பேரிடர் தடுக்கும் வகையில் தமிழக பேரிடர் மீட்பு குழுவினரின் ஒரு குழுவானது உதகையில் நிரந்தரமாக தங்கி பயிற்சிகளை பெற்று வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக உதகையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் முன்பாக பேரிடர் மீட்பு குழுவினரின் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த தமிழக தேசிய பேரிடர் மீட்பு குழுவின் உதவிய இயக்குனர் மணிமாறன் தெரிவிக்கையில், நீலகிரி மாவட்டம் பேரிடர் அதிகம் நடைபெறும் மாவட்டம் என்பதால் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக 20 பேர் கொண்ட குழு தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் நிரந்தரமாக தங்கி பேரிடர் சமயங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்கள் அதிநவீன இயந்திரங் களை கையாள்வது குறித்து தினந்தோறும் பயிற்சிகளை பெற்று வருகின்றனர். இதன் காரணமாக எதிர்காலங்களில் நீலகிரி மாவட்டத்தில் ஏற்படும் பேரிடர் சமயங்களில் குழுவினர் உடனடியாக சென்று உயிர் சேதங்கள் மற்றும் பொருட்சேதங்களை தடுக்கும் வகையில் பணிபுரிவர் என்று கூறினார்.

மாலை தந்தி





இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை முஹம்மது சதக் பொறியியல் கல்லூரியில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மூலம் மதுபானம் மற்றும் போதை பொருள்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம் நிகழ்ச்சியில் போதை பொருட்கள் தடுப்பு தொடர்பான பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்.



சேதுபதி மேனிலைப் பள்ளியில் போதைப் பொருள் தடுப்பு மன்றத்தின் சார்பாக விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது. மதுரை மாவட்ட கலால் உதவி ஆணையர் திரு. ராஜ குரு மற்றும் கோட்டக்கலால் தாசில்தார் திரு சீனிவாசன் ஆகியோர் போதைப் பொருட்களால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து மாணவர்களிடம் விளக்கினர். அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தீபா போஸ்கோ சட்டம் குறித்து விளக்கிப் பேசினார். நிகழ்ச்சியில் தலைமையாசிரியர் ரி ஷி நாராயணன், உடற்கல்வி இயக்குனர் ரவி, மதுவிலக்கு உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், திலகர் திடல் காவல் உதவி ஆய்வாளர் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி ரயில்வே காலனி வெள்ளையன் தோப்பு பகுதியில் சேர்ந்த சேது மனைவி ராஜேஸ்வரி இறந்த செய்தியறிந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.உடன் துணைத் தலைவர் பாலசுந்தரம்,26 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் செல்வம்( எ) அழகர் சாமி உடனிருந்தார்..

## மதுரை மாநகராட்சி தேசிய தரச்சான்றிதழ் மதிப்பீட்டு குழுவினருடன் மேயர் ஆய்வு! ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கல்



மதுரை, பிப்.8

மதுரை மாநகராட்சி திருப்பரங்குன்றம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேசிய தரச்சான்றிதழ் மதிப்பீட்டு குழுவினருடன் மேயர் இந்திராணி பொன்வசந்த் ஆய்வு மேற்கொண்டார்.

தேசிய தரச்சான்று திட்டமானது ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரம் மேம்பாட்டுக்காக நடத்தப்படும் திட்டமாகும். இத்திட்டமானது சுயமதிப்பீடு, மாநில அரசின் மதிப்பீடு மற்றும் ஒன்றிய அரசின் மதிப்பீட்டை தொடர்ந்து சான்று வழங்கப்படும். மதுரை மாநகராட்சி மஸ்தான்பட்டி, முனிச்சாலை, அண்ணாத்தோப்பு, ஆனையூர், செல்லூர், திருநகர், தெற்கு வாசல், வண்டியூர், திருப் பாலை, கோ.புதூர், அன்சாரி நகர், வில்லாபுரம் ஆகிய 12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மதிப்பீட்டு குழுவினரால் ஆய்வு மேற் கொண்டுதேசியதரச்சான்றிதழ் 2024 ஆம் ஆண்டு வழங்கப் பட்டுள்ளது.

திருப்பரங்குன்றம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள ஆய்வகம், மருந்துகள்



இருப்பு, தாய்சேய் நலம், பராமரிக்கப்படும் பதிவேடுகள், பல்வேறு மருத்துவ சேவைகள் உள்ளிட்ட 12 பிரிவுகள் குறித்து முழுமையாக தேசிய தரச் சான்றிதழ் மதிப்பீட்டு குழுவினர் ஆய்வு மேற்கொள்வதை மாண்புமிகு மேயர் நேரில் பார்வையிட்டார்.

மேலும் மருத்துவமனையில் உள்ள பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வதை பார்வையிட்டு மகப்பேறு பரிசோதனைக்கு வருகைபுரிந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து மருந்து பெட்டகங்களை மேயர் வழங்கினார்கள்.

தொடர்ந்து மருத்துவ மனையில் காசநோய் தடுப்பு வாரம் குறித்து கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களை பார்வை யிட்டார்கள். இந்நிகழ்வில் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் சுவிதா, நகர்நல அலுவலர் மரு.இந்திரா, உதவி நகர்நல அலுவலர் மரு.அபி ஷேக், உதவி ஆணையாளர் பாரத்தசாரதி, நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளையின் நிறுவனர் குருசாமி, தேசிய தரச்சான்றிதழ் மதிப் பீட்டு குழு வினர் பூர்ணிமா, பிரிக் மனோஜ்பட், மண்டல மருத்துவ அலுவலர்கள் மரு.ப்ரீத்தி மீனா, மரு.லெட்சுமி காந்தன், மருத்துவர்கள், செவிலியர்கள், மாநகராட்சி அலுவலர்கள் உட் பட பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் அருகே காளிபாளையம் பகுதியில் கூடுதல் வகுப்பறை கட்டிட பணி துவக்கம்!



திருப்பூர், பிப்.8

திருப்பூர் அருகே வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்பூர் ஒன்றியம், காளிபாளையம் ஊராட்சி,ஒன்றிய நடுநிலை பள்ளியில் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 26.50 லட்சம் மதிப்பீடடில் மற்றும் மாவட்ட கவுன்சிலர் வேல்குமார் சாமிநாதன் பரிந்துரையில் பேரில் ஊராட்சி பொதுநிதி ரூபாய் 13.18 லட்சம் மதிப்பீட்டிலும் மொத்தம் ரூ39.68 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கு திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.என் விஜயகுமார் பூமி பூஜை நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.நிகழ்வில் மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் வேல்குமார் எம். சாமிநாதன், பெருமாநல்லூர் முன்னாள் சொசைட்டி தலைவர் பொன்னுலிங்கம், ஒன்றிய அவைத்தலைவர் ஐஸ்வர்யமகராஜ், ஒன்றிய பாசறை செயலாளர் சந்திர சேகர், முன்னாள் ஊராட்சித் தலைவர்கள் சிவசாமி,சுகன்யா வடிவேலு, நிர்வாகிகள் வெங்கடாசலம், பொன்னுசாமி, ஈஸ்வரன்,தனபால், அபிஷேக், செந்தில்குமார், சுரேஷ், பாலசுப்பிரமணியம், ரமேஷ்,ரஞ் சித்குமார், செந்தில்,முனுசாமி, கிளன்மார்கன் குமாரசாமி உள்ளிட்ட கழக தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சின்னாளப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் கொத்தடிமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு



திண்டுக்கல், பிப்.8

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி தலைமையில் கொத்தடிமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்க்கப்பட்டது. இந்நிகழ்வில் சுகாதார ஆய்வாளர் கணேசன், உதவியாளர் கலைச்செல்வி, உள்ளிட்ட அலுவலக பணியாளர்கள், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் சுகாதார பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.



தேனி மாவட்டம் விளையாட்டு மைதானத்தில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் 14 வதுக்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்கான 4வது மாநில அளவிளான குடியரசு தின குழு விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சியர் ஆர் வி ஷஜீவனா சட்டமன்ற உறுப்பினர்கள் கே.எஸ் சரவணக்குமார் (பெரியகுளம்), ஆ மகாராஜன் ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்



கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரிக்கு வருகை தந்த கொரிய பல்கலைக்கழக பேராசிரியர் சமந்த் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெயந்தி கல்லூரி நான் முதல்வன் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆர்தர்மரஜினிமனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக செனட் உறுப்பினர் முனைவர்.ஆ.பிரபுமாறச்சன் மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழக ஒய் ஆர் சி மண்டல ஒருங்கிணைப்பாளர் இனநலப்பெரியார் மற்றும் பேராசிரியர்கள் வரவேற்றனர்..

## இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை முஹம்மது சதக் பொறியியல் கல்லூரியில் போதை பொருள்களால் ஏற்படும் தீமைகள் குறித்த கருத்தரங்கம்

இராமநாதபுரம், பிப்.8

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை முஹம்மது சதக் பொறியியல் கல்லூரியில் இன்று (07.02.2025) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மூலம் மதுபானம் மற்றும் போதை பொருள்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., தலைமை வகித்து கருத்தரங்கைத் துவக்கி வைத்து பேசுகையில்,





மதுபானம் மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம் இன்று இங்கு நடைபெறுகிறது. தமிழ்நாடு அரசின் மூலம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக மாணவ, மாணவியர்கள் மத்தியில் போதைப் பொருட்களினால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அதனால் உண்டாகும் விளைவுகள் குறித்தும் அதிகளவு விழிப்புணர்வு வேண்டும். வருங்கால தூண்களான மாணவ, மாணவியர்கள் தான் சமுதாயத்தை சீராக கொண்டுவர முடியும். அவ்வாறான மாணவ, மாணவிகள் தங்களையும், தங்களது நண்பர்கள், தங்கள் அருகில் வசிப்பவரிடம் போதை பொருட்களினால் உண்டாகும் தீமைகள் குறித்து எடுத்துரைக்க வேண்டும். வருங்கால சந்ததியினரான நீங்கள் உங்களையும், உங்களைச் சார்ந்துள்ளோரையும் போதை பொருட்கள் பயன்பாட்டினால் உண்டாகும் தீமைகள் குறித்து எடுத்துரைப்பதன் மூலம் வருங்கால சந்ததியினரை சிறந்தவர்களாக உருவாக்கிட மாணவ, மாணவியர்கள் பங்கு மிக முக்கியமானதாகும் என தெரிவித்தார். தொடர்ந்து போதை பொருட்கள் தடுப்பு தொடர்பான பல்வேறு (கட்டுரை போட்டி, பேச்சு போட்டி, ஓவிய போட்டி) போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டுச் சான்றிதழ் கள் வழங்கி பாராட்டினார். முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு உறுதி மொழியை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் (இராம நாதபுரம்) இராஜமனோகரன், முஹம்மது சதக் பொறியியல் ற கல்லூரி துணை முதல்வர் முனைவர்.செந்தில்குமார், முஹம்மது சதக் பொறியியல் கல்லூரி முனைவர் நிர்மல் கண்ணன், செய்யது ஹமீதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர். இராஜசேகர், உதவி ஆணையர் (கலால்) சாந்தி மற்றும் மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161